# உங்கள் எதிர்காலம் உங்கள் கையில்!



இப்புத்தகம் உங்கள் வாழ்வின் வழிகாட்டி

Rs. 5.00

# திரு ஹரி அவர்கள் எழுதிய புத்தகத்திலிருந்து ஒரு பகுதி ...

## பிரமிக்க வைக்கும் மனித ஆற்றல்கள்



ஒவ்வொரு மனிதனுக்குள்ளே – மிக பெரிய சக்தி – ஒன்று உறங்கி கொண்டு இருக்கிறது. அந்த சக்தி அவனுக்கு வேண்டிய எல்லாவற்றையும் தருவதற்கு தயாராக இருக்கிறது. அன்பு, காதல், பணம், தொழில், வெற்றி, சொந்த வீடு, கார், பங்களா, ஆடம்பர வாழ்க்கை, எல்லாமே ! தரக்கூடிய சக்தி ! அந்த மனிதனுக்குள்ளே உண்டு. மனிதன் – அந்த சக்தியை புரிந்து கொள்ளவில்லை.

அந்த சக்தியை நம்பி அவன் தன் வாழ்க்கையை ஒப்படைக்கவில்லை. ஆறு அறிவு கொண்ட மனிதன் ஐந்து புலன்களை மட்டு உபயோகப்படுத்துகிறான். ஆறாவது புலமான "மனம்" என்ற அந்த சக்தியை சரியாக உபயோகப் படுத்தவில்லை.

மனம் அது செம்மையானால் – மந்திரம் ஜெபிக்க வேண்டாம் !! என்பது மாந்திரீக சாஸ்திரத்தின் அரிச்சுவடி பாடம் ! அது உண்மையே என்று மனவியில், உளவியல் (சைகாலஜிஸ்ட்) ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக்கொள்கிறார்கள் ! மனிதனின் மனம் இரண்டு வகைப்படும்.

*(1) வெளிமனம் (2) உள்மனம்*

### 1. வெளிமனம் (*அல்லது*) மேல்மனம்!

நம்முடைய மனதை பத்து பங்காக பிரித்தால் அதில் ஓர் பங்குதான் வெளிமனம் ! இது கண், காது, மூக்கு, வாய், தோல் போன்ற ஐம்புலன்கள் மூலம் உணரப்படும் அனுபவம், அறிவு காரணமாக ஒவ்வொரு சூழலையும் சந்தர்ப்ப சூழலையும், பகுத்துணர்ந்து அதற்கு ஏற்ற வாழ்க்கையை தோந்தெடுக்கும் படி செய்யும் !

பொதுவாக! மனிதர்கள் இந்த மேல் மனதால் தான் ஆட்சி செய்யப்படுகிறார்கள்.

மேல் மனதால் – ஆட்சி செய்யப்படும் மனிதன் அவன் பிறக்கும் பொழுது, அவனுக்குள்வசதி, சூழ்நிலை, வயது, பாதுகாப்பு, அறிவு, படிப்பு, ஆற்றல் இவற்றின் மூலம் அவனுடைய எதிர்காலம் நிச்சயிக்கப் படும்.

## 2. உள்மனம்!

நம் உணர்வுக்கு அப்பால், நம் இச்சைக்கு அடங்காது, நம் நேரடி தொடர்பு இல்லாது ஒளிந்து இருக்கும் மனதின் மற்ற ஒன்பது பகுதிகளே! உள்மனம், கடலின் ஆழம் போல் மிகமிக அமைதியானது பரவகூடியது பிரஞ்ச சக்தியுடன்–ஐக்கியமாக கூடியது! சுற்றுபுற சூழலை மாற்றும் சக்தி வாய்ந்தது! உள்மனதில்–என்ன தோன்றுகிறதோ அதை அப்படியே நடத்தி கொடுப்பது தான் அதன் முக்கியப்பணி!

உள்மனம் உலகோடு தொடர்பு கொள்ள ஐம்புலன்களின் உதவியை நாடுவதில்லை. அது கண்ணின்றிப் பார்க்கும்; காதின்றிக் கேட்கும்; மூக்கின்றி நுகரும்; நாக்கின்றி ருசிக்கும்; தோலின்றி ஸ்பரிசிக்கும், வெப்பம், தட்பம், நோவு முதலிய உணர்ச்சிகளை தொடாமல் உணரவல்லது.

உள்மன இயக்கத்திற்கு உடல் தொடர்பு தேவையில்லை! தூக்கத்தில் நடத்தல்–என்று ஓர் வியாதி உண்டு–இந்நோயாளிகள் தூங்கிக்கொண்டே எழுந்து நடப்பர் மற்றும் விழிப்பு நிலையில் என்னவெல்லாம் செய்வார்களோ அவைகளை எல்லாம் கொஞ்சமும் குறைபாடின்றி செய்து முடிப்பார்கள். ஆனால் கண்கள் மூடியே இருக்கும் எல்லாம் செய்து முடித்து விட்டு மறுபடி வந்து படுத்துக் கொள்வார்கள். காலையில் நடந்ததை சொன்னால் நம்ப மாட்டார்கள். ஆச்சரியப்படுவார்கள் ஏனென்றால்–தூக்க நிலையில் அவர்கள் செய்த காரியங்கள் எதுவுமே! அவர்கள் வெளிமனதுக்கு தெரியாது! இவைகள்–அனைத்தும்! உள்உணர்வுடன், கண்ணின்றிப் பார்த்து காதின்றி கேட்டு செய்த செயல்கள்! இந்த நோய் “உள்மன சிதைவால்” ஏற்படுவதாகும்.

இந்த உள்மனதில் தான் ஏகப்பட்ட சக்திகளும், பிரமிக்கத்தக்க ஆற்றல்களும் அடங்கியுள்ளது!

ஓர் மனிதனை உள்மனம் ஆட்சி புரியமானால்... அவன் பிறந்து வளாந்து வரும் சூழ்நிலை, வசதி, வயது, உடல்நிலை, பாதுகாப்பு, படிப்பறிவு, திறமை யாவும் மிக மோசமான நிலையில் இருந்தாலும் கூட

அவனுடைய எதிர்காலம் பிரமிக்கும் படியான, முன்னேற்றங்களையும், வசதிகளையும், சாதனைகளையும் கொண்டதாக அமையும்!

உணவிற்கே வழியின்றி வியன்னா நகரில் பிச்சை எடுக்கும் சூழலில் இருந்த ஹிட்லர்! உலகத்தையே அடக்கியாளும் வலிமை பெற்றதன்... காரணம்? அவனுடைய உள்மனம் அவனுடைய வாழ்க்கை அவனுடைய உள்மனதிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தது! மேல் மனதிடம் (வெளிமனதிடம்) அவனுடைய வாழ்க்கை ஒப்படைக்கப்பட்டு இருக்கு மானால்... ஹிட்லர் பிச்சையெடுத்து... சேரியிலேயே காலம் கழித்து இருப்பான்!.

ஓர் மனிதனின் அன்றாட வாழ்க்கையை வெளிமனம் (பகுத்தறிவு) நடத்துகிறது ஆனால் அவனுடைய வாழ்க்கையில் ஏற்படும் முக்கிய திருப்பங்களை அதிர்ஷ்டங்களை முன்னேற்றங்களை எதிர்பாராத யோகங்களை–எதிர்பாராத சம்பவங்களை, எதிர்பாராத நஷ்டங்களை விபத்துகளை கூட உள்மனம் நடத்துகிறது ஏற்படுத்துகிறது. மேற்குறிய சம்பவங்களுக்கு காரண காரியங்களை, விளக்க முடியாது அதிர்ஷ்டம் துரதிஷ்டம் என்று மட்டுமே கூறமுடியும்!

பெரும் வெற்றி பெற்றவர்கள் சாதனையாளர்கள், திடீர் குபேரர்கள் திடீர் அதிர்ஷ்டசாலிகளை விசாரித்து பார்த்தால் அவர்கள் வாழ்க்கையில் பகுத்திறிவுக்கு விளக்கம் கூற முடியாத அநேக சம்பவங்கள் நடந்து இருப்பதை காண்பீர்கள் மேற்குறியவர்கள் அனைவருமே (விஞ்ஞானிகள் உட்பட) ஏதோ ஓர் தீவிரமான நம்பிக்கை, விசித்திரமான பழக்கவழக்ங்கள் இருப்பதையும் காணலாம் பகுத்தறிவுவாதிகள் இதை மூடநம்பிக்கை என்று கூறுவார்கள்.

விமானத்தை கண்டுபிடித்த ரைட் சகோதரர்களின் வானத்தில் பறக்கும் முயற்சி முட்டாள் தனமானது என்று மக்கள் கிண்டல் செய்தனர். இப்பொழுது மனிதன் சந்திரனுக்கே போய் வந்து விட்டான்.

ஆம்.

பகுத்தறிவு ஓர் எல்லைக்குப்பட்டது! சக்திக்க மீறி முயற்சி செய்யும் பொழுது முடியாது! நடக்காது என்று ஆயிரம் காரணம் சொல்லி தடைபோடும்!

உள்மனம் எல்லையற்ற பிரபஞ்சத்தின் சக்தி, நடக்காது முடியாது என்று நினைக்காது குருட்டாம் போக்கில் முட்டாள்தனமாக முயற்சி செய்வது போல் தோன்றும்! முடிவு? பிரமிக்கத்தக்க சாதனையாக அமையும்!

உள்மனம் சாதித்ததை பகுத்தறிவு காரண காரியங்களை விமர்சித்து... தான் சாதித்தது போல் காட்டிக்கொள்ளும் பகுத்தறிவால் காரணகாரியங்களை கண்டுபிடிக்க முடியாவிட்டால், மூட நம்பிக்கை அதிர்ஷ்டம் என்று ஒதுங்கிக் கொள்ளும்!

பகுத்தறிவுக்கு விளக்கம் கூற முடியாத கின்னஸ்சாதனைகளை கவனிக்கவும் (தொலைக்காட்சியில் பார்த்து இருப்பீர்கள் 25 பயணிகளை கொண்ட பஸ்சை தலை முடியில் பிணைத்து ... இழுத்து சென்ற சாதனையை பற்றி பகுத்தறிவு விளக்கம் கூற முடியாது)

விஞ்ஞானத்தில் முன்னேறிய நாடுகளில் இதுபோன்ற மனோசக்திகளை பற்றி ஆராய்ச்சிகள் தீவிரமாக நடந்து கொண்டு வருகிறது. உள்மன ஆற்றலை வெளிப்படுத்த பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகிறது. பைபிள் சொல்கிறது... (உள்மனதை தட்டுங்கள் திறக்கப்படும். கேளுங்கள் கொடுக்கப்படும் என்று நீங்கள் தட்டுங்கள் உள்மனம் திறக்கப்படும. உள்மனதிடம் கேளுங்கள் எல்லாமே கிடைக்கும்.

எதிர்கால சம்பவங்கள் அனைத்தும் உள்மனதில் இருந்தே ஆரம்பமாகிறது. எந்த ஒரு சம்பவமும் திடீர் என்று நடப்பதே இல்லை.

"உள்மனதில்" சிந்தனையாக, கற்பனையாக, செய்திகளாக, எண்ணங்களாக, பயமாக, ஆசைகளாக, கருத்துகளாக பதிந்த உணர்வுகளே பிற்காலத்தில் சம்பவங்களாக நம்மைச் சுற்றி நடக்கிறது.

நோய்கள் கூட, மனதில் தான் ஆரம்பமாகிறது பிறகு உடலில் வெளிப்படுகிறது. ஒரு நோயை பற்றி கேள்விப்பட்டபிறகு, அறிந்த பிறகு, படித்த பிறகு அது உள்மனதில் பதிந்து, பிறகுதான் நோய் உடலில் வெளிப்படுகிறது.

ஆதிகாலத்தில், நம்பவே முடியாத, கற்பனையாக மனதில் ஆழமாக பதிந்த சந்திர மண்டல பயணம். பிறகு விஞ்ஞான யுக்திகளால் சாதிக்கப்பட்டது என்றாலும் அது ஆரம்பமான இடம் மனிதர்களின் மனதில் இருந்தே.

சந்திரனை தொட வேண்டும் என்ற கற்பனை உள்மனதில் பதித்து விஸ்வரூபம் எடுத்துச் சம்பவமாக மாறியது.

பொதுவாக, எதிர்காலம் பற்றிய இன்பகனவுகள், கற்பனைகள், ஆசைகள், நம்பிக்கைகள், லட்சியங்கள், குறிக்கோள்கள் பற்றி மேல்மனம் அசை போட்டபடி இருக்கும். இவைகள் மேல்மனதோடு உள்ளவரை

காரியங்கள் நடக்காது.

(கற்பனைகளையும், லட்சியங்களையும் உள்மனதிற்கு இடமாற்றம் செய்து, உள்மனதில் ஆழமாக பதியவைத்தால்)

சில வருடங்களில் உங்கள் கற்பனைகள் நிறைவேறும். ஒரு மனிதனை வசியப்படுத்தி அவன் உள்மனதில் எதிர்காலம் பற்றிய நல்ல செய்திகளை பதிய வைத்தால், சில வருடங்களில் அது விஸ்வரூபம் எடுத்து சம்பவமாக வெளிப்படும். சிலர் சாபம் கொடுத்தால் குற்ற உணர்வு உள்ளவர்கள் மனதில் அந்த சாபம் உள்மனதில் பதிந்து, அந்த சாபத்தின்படி முன்னேறமுடியாமல் செய்துவிடும்.

(உள்மனசக்தி) சக்தி வாய்ந்த மகான்கள் ஆசிர்வாதம் செய்து, எதிர்காலம் பிரகாசமாக இருக்கும் என்றும் கூறும் வார்த்தைகள் உங்கள் மனதில் பதிந்தால் எதிர்காலம் பிரகாசமடைய துவங்கும்.

உள்மனதில் சுப வார்த்தைகளை பதியும்படி செய்ய மனோவசிய கலை உதவுகிறது. சாதாரண மனித வார்த்தைகளே மனதில் பாதிப்பை ஏற்படுத்தும் பொழுது... இரவில், ஆழ்ந்த உறக்கத்தில் முன்னோர்களின் சக்திவாய்ந்த மனம் நம் மனதோடு கலந்து செயல்படதுவங்கினால் ...? வாழ்க்கையே மாறிப்போகாதா?

இறைவனின் மனமும், முன்னோர்களின் மனமும், நம் உள்மனதில் கலந்து விட்டால் மனிதனும் தெய்வமாகலாம். தெய்வத்தை தேடி கோவில் குளம் என்று அலைவதைவிட உனக்குள்ளே இருக்கும் தெய்வீக சக்தியை மறந்து செயல்படுவதை விட்டு, இனி உன்னையே நீ உணர துவங்கினால், உன் எதிர்காலம் சுபிட்சமாக அமையுமே! உனக்கு தேவையான வசதி, வாய்ப்புகளை வெளியே தேடாதே. உனக்குள்ளேயே சகலமும் அடக்கம் என்று முன்னோர்கள் கூறியிருக்கின்றனர்.

(உள்மனதில்) நம்பிக்கை இருந்தால் — கடல் மீது நடக்கலாம் என்று பைபிள் சொல்கிறது. ஆக, உடனே! உங்கள் உள் மனதில் ஓர் நம்பிக்கை ஒளி பிரகாசிக்கட்டும். இல் வாழ்க்கையில் எல்லா சுகங்களையும் அடைய முதலில் தேவை — திடமான, கண் மூடித்தனமான, பகுத்தறிவால் ஆராயப்படாத (நம்பிக்கை உள்மனதில்) ஏற்பட வேண்டும். உங்கள் வாழ்க்கையை சோதித்து பார்க்க, அனேக வாய்ப்புகள் உங்களை சுற்றியே அமைந்துள்ளது.

R.P.ஹரி

# உன் மனதை பாதிக்கும் வார்த்தைகள்

பிரகாசமாக வாழ போகிறாய்!! என்ற ஓர் வரி பலன் மிக சக்தி வாய்ந்தவர்கள் மூலம் வெளிபட வேண்டும் அந்த பலன் பலன் கூறுபவரின் உள்மனதில் இருந்து புறப்பட்டு பலன் கேட்பவரின் உள்மனதை சென்று அடைய வேண்டும். அப்பொழுதும்தான் கூறப்பட்ட பலன் பலிக்கும் மேல் மனதிற்கும் பகுத்தறிவுக்கும் இங்கு வேலையே கிடையாது! சிறுவயதில் நான் செய்த விளையாட்டான பரிசோதனையை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

ஓர் திருமண நிகழ்ச்சிக்கு நண்பர்களுடன் சென்று அரட்டை அடித்துக் கொண்டு இருந்த பொழுது திருமணவிருந்துக்கு அழைக்கப்பட்டு அவரவர் இலைக்கு முன்பு ஆவலுடன் அமர்ந்து இருந்து பொழுது அருகே இருந்த நண்பரிடம் வேடிக்கை காட்ட நினைத்தேன்... மெதுவாக அவரிடம் ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?! என்றேன் ஒன்றுமில்லையே!! என்றார் வியப்பாக!

இல்லை! சிறுநீரை அடக்கி கொண்டு! சாப்பிட உட்கார்ந்து இருக்கிறீர்கள் போல் தெரிகிறதே... என்றேன்! முகத்தை சுழித்துக் கொண்டு... ஓர் மாதிரியாக முறைத்து பார்த்தார்... பிறகு இல்லை என்றார்... எரிச்சலுடன் நானும் விடாமல்...

நீங்கள் இல்லை என்று சொல்லும் பொழுதே பலவீனமாக சொல்கிறீர்கள்... ஆக இப்பொழுது உங்களுக்கு அவசரமாக சிறுநீர் வருகிறது!! என்றேன்...

அவரோ... பதில் ஏதும் சொல்லாமல்... வேறு எங்கேயோ! கவனத்தை திருப்ப முயற்சி செய்தார்... நான் என் முயற்சியில் பாதி வெற்றி அடைந்து விட்டதை உணர்ந்தேன்.

ஆம் என் வார்த்தைகள் அவருடைய உள் மனதில் போய் பதிந்து விட்டது!! உள் மனதில் பதிந்த வார்த்தைகள் செயல் படாமல் இருக்குமா? செயல் பட்டது!! நானும் என் கடைசி வார்த்தையை பிரயோகித்தேன்! வயிற்றில் சிறுநீரை அடக்கி கொண்டு விருந்து சாப்பிட்டால்... சாப்பிட்டது போலவே இருக்காது என்று ஓர் போடு போட்டேன்.

இந்த நேரத்தில் உணவு பரிமாற்றம் தொடங்கி விட்டது! சில நிமிடங்களில் என்ன நினைத்தாரோ தெரியவில்லை தன் இருக்கையின் மீது தன் கைக்குட்டையை அடையாளமாக வைத்துவிட்டு... மனதிற்குள் சபித்துக்கொண்டே சிறுநீர் கழிக்க ஓடினார்...!! போன வேகத்தில் திரும்பி வந்து... நிம்மதியாக விருந்தை சுவைக்கத் துவங்கினார்!

சாதாரண வார்த்தைகளே! ஓர் மனிதனின் உடலில், இயக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் பொழுது!

தகுந்த நேரத்தில் சூஷ்மமான முறையில்... உங்கள் உள்மனதிற்கு நீ எதிர்காலத்தில் பிரகாசமாக வாழ போகிறாய்! வாழ போகிறாய்! என்ற வார்த்தைகளை பதிய செய்தால் – என்ன ஆகும்!? சிந்திக்கவும்.

தீவிரமான எம்.ஜி.ஆர் ரசிகர் ஒருவர் திரு.எம்.ஜி.ராமசந்திரன் அவர்களின் உடல் நலம் கெட்டு விட்டதாக அறிந்ததும் அதிர்ச்சி அடைந்தார்... கிட்னியை மாற்றினால் தான் உடல் பிழைப்பார் என்று பலர் கூறியதையும், செய்தி தாள்களில் படித்ததையும் விரிவாக பலரிடம் பேசிக்கொண்டு இருக்கையில்... கிட்னியை பற்றி அறியும் ஆவலில் தன் நண்பரிடம்...

கிட்னியை பற்றி சொல்லுங்கள் என்று கேட்டு வைத்தார் அவரும் கிட்னி நம் உடலில் ஓர் முக்கியமான உறுப்பு வயிற்றுக்கு வலப்பக்கம், இடப்பக்கமாக இரண்டு இருக்கிறது!

ஒரு மனிதனுக்கு கிட்னி இருந்தால் போதும் பிழைத்து கொள்ளலாம் நம்ம தலைவருக்கு யாராவது ஒரு கிட்னியை தானமாக கொடுத்தால் தலைவர் பிழைத்துக்கொள்வார்! என்றார்.

கிட்னி என்ன வேலை செய்கிறது...?

இரத்தத்தில் உள்ள உப்பை, மற்றும் பல நச்சு தன்மைகளை பிரித்து சிறுநீர் வழியாக வெளியே அனுப்புகிறது கிட்னி இரண்டும் கெட்டு போய்விட்டால்! கெட்ட இரத்தம் கிட்னிக்கு வந்து சேரும்.

கிட்னி இரத்தத்தை... சுத்தப் படுத்தாமல் அனுப்பி விடும் இதன் காரணமாக இரத்தம் கெட்டுப் போய்க்கொண்டே வந்து மனிதனைக் கொன்று விடும் என்றார்...!

கிட்னியை மாற்றும் வரை ஆள் உயிருடன் இரப்பாரா? தினமும் இரத்தத்தை வெளியே எடுத்து மிஷனில் சுத்தம் செய்து உடம்புக்கு அனுப்பும்படி செய்வார்கள்! அதாவது கிட்னி செய்ய வேண்டிய வேலையை மிஷன் செய்யும் என்றார்.

ஐய்யோ பயங்கரம் இப்படி எல்லாம் வாழ்வதை விட சாவதே மேல் என்று ஒருவித பயத்துடன் கூறினார்...

அது சரி ஏன் இந்த கிட்னி பாதிக்கிறது? (தன்னை காப்பாற்றிக் கொள்ள... இந்த கேள்வி போலும்)

சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கும், இரத்த கொதிப்பு உள்ளவர்களுக்கும் தான்... இது பாதிக்கும்...

இந்த கடைசி வார்த்தை இவருடைய உள்மனதை ரெம்பவும் பாதித்தது ஏனென்றால் இவருக்கு சர்க்கரை வியாதி!! உண்டு...

உள்மனதில் ஓர் வார்த்தை சம்பவம் பயம் பதிந்து விட்டால் அது நடந்தே தீரும் என்பது விதி!

ஆக எம்.ஜி.ஆர் இறந்த பின்பு, உள்மனதில் பதிந்த வார்த்தைகள் தீவிரமடைந்து 5 ஏப்ரல் 1991ல் மேற்கூறிய நபர் கிட்னி பாதிப்பால் காலமானார்! இவர் பயந்தது. போலவே இவருடைய இரத்தத்தையும் வெளியே எடுத்து மிஷினில் சுத்தம் செய்து உடலுக்கு அனுப்பும் படியான சூழ்நிலை எல்லாம் வந்தது சென்னை ராயப்பேட்டை மருத்துவமனையில் தான் சிகிச்சை மேற் கொள்ளப்பட்டது.

ஆக! எண்பது சதவிகிதம் ஒரு மனிதனின் நோய்... அவனுடைய உள் மனதில் தான் ஆரம்பிக்கிறது! நோய் மட்டுமல்ல... வாழ்க்கை சம்பவத்தின் முக்கியமான அம்சங்கள் எல்லாம் இந்த உள்மனதில் தான் ஆரம்பமாகிறது! ஒவ்வொரு செயலுக்கு முன்பு உள்மனம் தான் செயல்படுகிறது!

இந்த உள்மனதை தகுந்த வழியில் கட்டுபடுத்தினால் தான் வாழ்க்கையில் சாதனை புரியலாம்...!

எல்லா பிரச்சனைகளுக்கும் மூலஸ்தானம் இந்த உள்மனம் தான் உங்கள் வாழ்க்கையை மாற்ற ஓர் சில வார்த்தைகள், சம்பவங்கள் போதுமானது!

வாழ்க்கையில் முன்னுக்கு வரவேண்டும் என்று என்னை சந்திப்பவர்களின் உள்மனதோடு தான் நான் செயல்படுகிறேன்! உள் மனதில் ஏற்படும் மாற்றங்கள் சட்டென்று வெளியே தெரியாது...! சில மாதங்களாகலாம், சில வருடங்கள் கூட ஆகலாம்... ஆனால் பதியப்பட்ட வார்த்தைகள் நிச்சயம் விஸ்வரூபம் எடுக்கும்...! எதிர்காலமே... அந்த வார்த்தைகளை ஒட்டியே அமையும்!! ஆக!

உங்களை சுற்றி உங்களை நோக்கி வரும் வார்த்தைகளில் நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள்... மனதை நல்ல விதமாக பாதிக்க கூடிய புத்தகங்களாகவும் படிக்கவும், கண்ட, கண்ட புத்தகங்களை படிக்க வேண்டாம், உங்களை நீங்களே மதிக்க கற்றுக் கொள்ளவும், உங்களை பற்றி யாரும் தீயதாக விமர்சனம் செய்ய விடாதீர்கள்! உங்களைப் பிறர் சந்திக்கும் பொழுது இவன் எதிர்காலத்தில் எதையோ,

பிரமிக்கும் படி சாதிக்கபோகிறான் என்று மற்றவர்கள் நினைக்கும்படி பழகவும்.


அந்த நினைப்பு! உங்கள் வெற்றிக்கு பாதை அமைக்கும். மீண்டும் எச்சரிக்கிறேன். உங்களை நோக்கி வரும் வார்த்தைகளில் எச்சரிக்கையாக இருங்கள்! வார்த்தைகளுக்கு வலிமை அதிகம்! குறிப்பிட்ட அலைவரிசையில் வார்த்தைகளை பிரயோகம் செய்வதே மாந்திரீக சாஸ்திரத்தின் பாலபாடம்.

ரஷியாவில் ஜார் மன்னர் ஆட்சி காலத்தில் தூக்குத் தண்டனை அடைந்த ஓர் கைதியை டாக்டர்கள் தங்களுடைய ஓர் பரிசோதனைக்கு ஒப்படைக்கும் படிகேட்டு கொண்ட படியால்...

அக்கைதி பரிசோதனைக்காக டாக்டர்களிடம் ஒப்படைக்கப் பட்டான்! அக்கைதியை ஒரு படுக்கையில் படுக்க வைத்து கை, கால்கள், நகரவிடாமல் கட்டி, பிணைத்து...

அவனுடைய உடலில் உள்ள ரத்தத்தை முழுவதும் டியூப் வழியாக வெளியே எடுத்து அவனை சாகடிக்க போவதாக டாக்டர்கள் அவனிடம் கூறினார்கள்.

இதைக் கேட்ட கைதி வெலவெலத்துப்போனான்!



அதுமட்டுமல்ல சரியாக எட்டுமணி நேரத்தில் அவனுடைய ரத்தம் சொட்டுசொட்டாக அவனுடைய படுக்கைக்கு கீழே உள்ள தொட்டியில் முழுவதும் சேர்ந்து விடுமாகையால்.

சரியாக எட்டு மணி நேரம் கழித்து இப்படுக்கையில் கைதியின் உயிரற்ற உடல் தான் இருக்கும் என்று டாக்டர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்! இதை கவனித்த கைதியின் மனமும் சோர் வடைந்து, உடலும் சோர்ந்து போனான் ஏற்கனவே டாக்டர்களின் பரிசோதனைத் திட்டப்படி அவனுடைய உடலில் ஊசிகள் குத்தப்பட்டு உடலுக்கு சக்தி அளிக்கும் குளுகோஸ் கலந்த நீர் ஊசி மூலம் ஏற்றப்பட்டது!

கைதியோ ஊசி மூலம் தன்னுடைய இரத்தம் வெளியேற்றப் படுவதாக நினைத்தான்!

வேறு ஒரு இணைப்பு குழாய் மூலம் கைதியின் படுக்கையின் அடியில்... நீர் சொட்டு, சொட்டாக... படுக்கையின் கீழ் உள்ள தொட்டியில் சொட்டும்படி இணைந்தார்கள்!!!

கைதியோ தன் முதுகுக்கு கீழே நீர் சொட்டும் ஓசையை தன் இரத்தம் தான் டியூப வழியாக வெளியே! தொட்டியில் சொட்டிக் கொண்டு இருப்பதாக நினைத்தான்...

ஒவ்வொரு நீர் சொட்டும் ஓசையும் கைதியின் உயிருக்கு எமனாக மாறியது.

ஆம்!! வெறும் வார்த்தைகளே! சூழ்நிலையை அனுசரித்து எமனாக மாறி அக்கைதியின் உயிரை சரியாக எட்டு மணி நேரத்தில் பிரித்தது! உடலில் இருந்து இரத்தம் வெளியே எடுக்கப்படவில்லை! மாறாக உடலுக்கு சக்திமிகுந்த குளுகோஸ் தான் ஏற்றப்பட்டது கைதியின் மரணத்திற்கு காரணம்? உள் மனதில் பதிந்த வார்த்தைகளே! மனம் பிரமிக்கத்தக்க ஆற்றல் உடையது!! அதில் விதைக்கப்படும் திணிக்கப்படும் வார்த்தைகள், கருத்துகள், செய்திகள், கற்பனைகள்... சம்பவங்கள் படுபயங்கரமாக விஸ்வரூபம் எடுக்கும் என்பது விதி! வாழ்க்கையில் ஏற்படும் பல திடீர் சம்பவங்களுக்கு உள்மனதில் ஏற்படும் பாதிப்பே காரணம்!

உள்மனம் அன்றாட வாழ்க்கையில் செய்யப்படும் வழக்கமான பழக்கமான காரியங்களில் தலை இடாமல் ஒதுங்கி கொள்ளும்...! ஆர்வம் காட்டாது புதிய சம்பவங்கள், புதிய சந்திப்புகள், புதிய சூழ்நிலைகள், புதிய அனுபவங்கள் ஏற்படும் பொழுது மட்டும்... கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்கும்! கவனிக்கும்!

*உதாரணமாக*

சில மாதங்கள் கழித்து உங்கள் நண்பர் ஒருவரை பார்க்கிறீர்கள் என்னபா! திடீர் என்று துரும்பாய் இளைத்து விட்டாயே! என்ன? ஏதாவது பிரச்சனையா? முகம் ஒட்டி போய் விட்டதே! என்று கூறிபாருங்கள்... இந்த வார்த்தைகளின் ரிசல்ட் ஒரு மாதத்தில் தெரியும் நல்லா இருந்த மனுஷன்! நீங்கள் சொன்னபடியே! இளைத்து துரும்பாகி விடுவார்... (சோதித்து பாருங்கள்)

ஏன்? பல மாதம் கழித்து... நீங்கள் அவரை சந்திக்கிறீர்கள் ஆகையால்! உங்களை, உங்கள் வார்த்தைகளை அவருடைய உள்மனம் கொஞ்சம் உன்னிப்பாக கவனிக்கிறது! இந்த நேரத்தில் போய் உடம்பு இளைத்து விட்டாயா! என்று கூறினால். அந்த நாசமாய் போன வார்த்தை உள்மனதில் பதிந்து... விஸ்வரூபம் எடுத்து! நிசாமாகவே அவரை... பாதித்து விடுகிறது! இதுபோல் நாலு பேர் அவரிடம் மாறி மாறி சொன்னால் போதும் அவரை நோயாளியாக்கி விடலாம்! இதை படிக்கும் அன்பர்கள் இனி யார்... எதை சொன்னாலும் அதாவது!! தீயதாக எதைச் சொன்னாலும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

சரி! விஷயத்துக்கு வருவோம்.

இப்படிப்பட்ட சக்தி வாய்ந்த உங்கள் உள்மனதில் உங்களை பற்றிய ஓர் சுகமான கற்பனை விதைக்கப் படுமானால், அல்லது திணிக்கபடுமானால்...! என்ன ஆகும் என்பதை... சிந்தித்து பார்க்கவும்!!

என் தொழில் ரகஸ்யங்களில் இது மிக முக்கியமான ரகஸ்யமாகும் ஆம்!! நான் கனவுகளை விற்பனை செய்கிறேன் உள்மனதிற்கு.

ஆக! உங்கள் உள் மனதில் உங்கள் வாழ்க்கையை பற்றி ஓர் அருமையான, பிடித்தமான மகிழ்ச்சியான கற்பனை ஓவியத்தை தீட்டி வையுங்கள்!!

பிறகு பாருங்கள் பிரமிக்க தக்க மாற்றங்களை இவ்வுலகம் உங்களை வரவேற்க காத்து இருக்கும்!!

நான் ஆழ்ந்த உறக்கத்தில் உள்ள பொழுது... நம்முடைய உள்மனம் விழித்து கொண்டு இருக்கும்!! நாம் ஓர் தீவிரமான பிரச்சனைகளில் மாட்டிக் கொண்டு இருக்கும் பொழுது நம்முடைய பகுத்தறிவுடன் தீட்டிய திட்டங்கள் தவிடு பொடியாகிவிட்ட நேரத்தில் என்ன? செய்வது என்ற... புரியாத நிலையில் ஏற்படும்... பகுத்தறிவு இனி நம்மால் முடியாது! தெய்வம் தான் உதவி செய்ய வேண்டும் என்று கூறி... விலகி கொள்ளும்!

இந்த சமயத்தில் நமக்கு உதவி செய்ய உள்மனம் செயல்பட ஆரம்பிக்கும்!! பிரச்சனைகளை பூதகரமாக மாற்றி விட்ட பிறகுதான் தன்னையும் அறியாமல் பிரச்சனைகளை உன் மனதிடம் ஒப்படைக்கிறோம். ஆரம்பத்திலேயே உள் மனதிடம் பிரச்சனைகளை ஒப்படைத்து விட்டு நிம்மதியாக வாழ மனிதனுக்கு தெரியவில்லை!



மகாபாரதத்தில் ஓர் சம்பவம் உண்டு கிருஷ்ணா!! பாண்டவர்கள் சூதாட்டத்திற்கு ஒத்துக்க கொண்ட பொழுதும், நீ

அவர்களை தடுக்கவில்லை.

துரியோதனன் தனக்கு பதிலாக சகுனியை சொக்கட்டான் விளையாடவிட்டு, நயவஞ்சகமாக சூதாட்டத்தில் தான் நினைத்த எண்களை விழும் படி செய்த பொழுது நீ தடுக்க வில்லை பாண்டவர்கள் எல்லா வற்றையும் இழந்த பிறகு திரௌபதியை பணயமாக வைத்து சூதாடும் பொழுதும் தடுக்க வில்லை கடைசியாக திரௌபதியை துகில் உரியும் பொழுது மட்டும் வந்து சேலை கொடுத்து உதவுகிறாயே! இது எந்த விதத்தில் நியாயம்? நீ நினைத்து இருந்தால் ஆரம்பத்திலேயேதடுத்து இருக்கலாமே... நீ செய்தது தர்மம் ஆகுமா? என்று கிருஷ்ணனின் தேரோட்டி உத்தமர் கேட்க...!

கிருஷ்ணர் பதில் சொல்கிறார்... உத்தமா! சூதாட்டம் விளையாடுவது எனக்கு தெரிந்து விடபோகிறதே! என்று எனக்கு தெரியாமல்... மறைத்து திட்டம் போட்டு விளையாடினார்கள்! அப்பொழுதும் என்னை அழைக்கவில்லை!

தனக்கு பதிலாக... சகுனி விளையாடுவார் என்று துரியோதனன் கூறும் பொழுது பாண்டவர்களுக்கு பதிலாக என்னை விளையாட அழைத்து இருக்கலாமே! பாண்டவர்கள் அப்பொழுதும் என்னை மறந்தார்கள்!

எல்லாவற்றையும் இழந்த பிறகு துரௌபதியை துகில் உரியும் பொழுது கூட வார்த்தைகளால் போராடி பார்த்தார்களே தவிர! என்னை நினைக்க வில்லை! துச்சாதனன் சேலையை பிடித்து இழுக்கும் பொழுது கூட துரௌபதி போராடி பார்த்து தன்னால் இனி ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலைக்கு வந்த பொழுது தான் கிருஷ்ணா!!! என்று என்னை அழைத்தாள்!! ஆகையால் அழைத்த பொழுதுதான் நான் உதவி செய்தேன்... என்று கிருஷ்ணா கூறுகிறார்!


ஆக! நம்முடைய உள்மனமும் அப்படிதான்! பகுத்தறிவுடன் மனிதன் செய்யும் செயலை வேடிக்கை பார்க்குமே தவிர! உதவி செய்ய முன்வராது. எவ்வளவு பெரிய சக்தியை நாம் மறந்து விட்டு அலட்சியபடுத்தி விட்டு நாம் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்!

இறைவன் வேறு எங்கும் இல்லை! இறைவன் நமக்குள்ளையே இருக்கிறார்!

இறைவனின் தன்மைகள் கொண்ட நம் உள் மனதை நமக்கு சாதகமாக்கி சொல்வது... இறைவனை வசப்படுத்துவது போலாகும்! எங்கும் எதிலும் வெற்றி அடையலாம்! இறைவன் நமக்கு தேவையானதை தருவதற்கு சித்தமாக இருக்கிறார்! நாம் அவரிடம் எதையும் முழுமையாக கேட்க வில்லை! தட்டுங்கள் திறக்கப்படும்!! கேளுங்கள் கிடைக்கும்!!

R.P.ஹரி

# ஆழ்மனதின்...
# மரண ஒத்திகை



16.06.1995 அன்று தினதந்தியில் வெளியான செய்தியின் சுருக்கம். கிறிஸ்டோவர் ரீவ், குழந்தைகள் முதல் பெரியவர் வரை குதூகலப்படும் ஆங்கில பட சூப்பர் கதாநாயகன் "சூப்பர் மேன்" திரையில் அற்புத வீரசாகஸங்கள் செய்த சூப்பர் மேன்... ஒரு வாரத்திற்கு முன்பு குதிரையோட்ட போட்டியில் கலந்து கொண்ட போது, குதிரையிலிருந்து தலை கீழாக தூக்கி வீசப்பட்டார். இதனால் தலையையும், முதுகையும் இணைக்கும் முக்கிய இரண்டு நரம்புகள் துண்டாகிவிட்டன, இதனால் உணர்வு இழந்த நிலையில் அருகில் உள்ள வெர்ஜீனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இப்பொழுது அவர் முற்றிலும் செயல் இழந்த நிலையில் கை, கால்களை அசைக்க முடியாமல் "ஜடமாக" உள்ளார். சுவாசிப்பதற்கு கூட அவரால் சரியாக முடியவில்லை இயந்திரத்தின் மூலம் செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டு வருகிறது. இவர் கடைசியாக நடித்த படம் "அயோல் சஸ் பீசியன்" ஆகும் இந்த விபத்திற்கு சிறிது நாட்களுக்கு முன் ஒரு டெலிவிஷன் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில்.

தண்டுவடத்தில் ஏற்படும் காயங்களை பற்றி ஆராய்வதற்காக, ஒரு விபத்து பிரிவு மருத்துவமனைக்கு சென்று வந்ததாகவும் எவ்வளவு சாதாரண் நிகழ்ச்சி கூட தண்டு வடத்தில் காயம் ஏற்படுத்தியுள்ளது என்று கூறியுள்ளார். தனக்கு வரவிருக்கும் விபத்தை அறியாமல் பேட்டி கொடுத்த சூப்பர் மேன் அதே தண்டு வட காயத்தால் இன்று மருத்துவமனையில் உணர்ச்சி இன்றி பரிதாபமாக உலகமெல்லாம் பல கோடி ரசிகர்களை கொண்ட சூப்பர் மேன் கிறிஸ்டோபர் ரீவ் படுத்த படுக்கையாக மருத்துவமனையில் உள்ளார்.

இங்கு சூப்பர் மேனின் ஆழ்மனம் ஏற்கனவே விபத்து பற்றிய செய்திகளால் நிரம்பி இருந்தது - ஆம். ஒவ்வொரு மனிதனின் ஆழ்மனம் - அவரவர் எதிர்காலத்தை பற்றி அறிந்தே உள்ளது அதற்கு ஏற்றபடி ஓர் விதமான செயல், பேச்சு, எண்ணம், சிந்தனை நடை உடை பாவனைகளில் (உள்மனம்) அவரவர் எதிர்காலத்தை பற்றிய செய்திகளை வெளிப்படுத்தியே தீரும். ஆக... வெற்றி தோல்வி, இன்பம், துன்பம், வசதி, வறுமை எல்லாம் ஆழ்மனதில் தங்கியுள்ளது. உங்கள் பிரச்சனைகள் தீர வசதிகள் அடைய, ஆழ்மனதின் துணையை நாட வேண்டும்.

R.P.ஹரி

# சகுனம் சரிதானா?

என் கடைசி சொட்டு இரத்தத்தை இந்தியாவிற்காக சிந்துவேன் என்று பேசிய சில தினங்களில் திருமதி இந்திராகாந்தி சுட்டுக்கொல்லப்பட்டார்... ஆம்! நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தைகளுக்கும் எதிர்கால வாழ்க்கைக்கும் சம்பந்தம் உண்டு.



இவ்வுலகில் நடக்கும் சம்பவங்கள் அனைத்தும் திடீர் என்று நடக்கக்கூடியது அல்ல!! ஒவ்வொரு சம்பவத்திற்கும்... ஆரம்ப அறிகுறிகள் நிச்சயம் இருக்கும்!! திடீர் அதிர்ஷ்டம், திடீர் நஷ்டம், திடீர் மரணம், திடீர் விபத்து... ஏற்படுவதற்கு முன் சில ஆரம்ப அறிகுறிகள் ஏற்பட்டு இருக்கும்.

உதாரணமாக... ஓர் இடத்தில் பூகம்பம் ஏற்படுவதாக இருப்பின் அவ்விடத்தில் உள்ளமிருகங்கள், பறவைகள், ஏன் எறும்புகள் கூட தன் இருப்பிடத்தை எச்சரிக்கையாக காலி செய்து கொண்டு போய்விடும். இதை கண்டு... மனிதர்கள் எச்சரிக்கையாக! இருக்க வேண்டியது அவசியம்! இங்கு மிருகங்களின் இடமாற்றம் தான் சகுனமாக எடுத்துக்கொள்ள வேண்டும். எனக்குத் தெரிந்த ஓர் மனிதர் திடீர் என்று தன் சொந்த ஊருக்கு கிளம்பி, பலரையும் சந்தித்து விட்டு... குடும்பத்தார் எல்லாருக்கும் கொஞ்சம் பண உதவி செய்து விட்டு, வீடு திரும்பிய உடன்... வக்கீலை சந்தித்து ... தன் சொத்துகளை பற்றிய உயில் எழுதி விட்டு தன் மகனை சந்தித்து ... தன் சொத்துகளை பற்றிய விவரங்களை கூறி விட்டு !! மிக சந்தோஷமான சூழ்நிலையில் மதியம் ஒரு நாள் சாப்பிட்டு படுத்தவர்! பிறகு எழுந்திருக்கவே இல்லை !!

நல்லாதான் இருந்தார் திடீர் என்று இறந்து விட்டார் என்று எல்லோரும் புலம்பினார்கள்!! இந்த மரணம் திடீர் என்று எற்பட்டது அல்ல... எப்பொழுது இவர் தன் ஊருக்குச் சென்று (கடைசியாக)

உறவினர்களை சந்தித்தாரோ அப்பொழுதே... இவர் மரணம் நிச்சியிக்கப்பட்டுவிட்டது!! அதுவும் சமீபத்தில் அது ஏற்படும் என்பதற்கான... அறிகுறிகளை அவர் தன் நடத்தைகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்!

ஆக! ஒவ்வொரு செயலுக்கு முன்பு... அதற்கான... அறிகுறிகள் தெரியும்... மனிதன் அதை சரியாக புரிந்து கொள்ளாததால் தான் ஏகப்பட்ட பிரச்சனை ஏற்படுகிறது...!!

ஓர் கம்பெனியில் இன்டர்வியுக்காக... காத்துக் கொண்டு இருக்கிறீர்கள் அதே வேலைக்கு மனு செய்துள்ளவர்...! பக்கத்தில் வந்து! நமக்கெல்லாம்... எங்கே சார் வேலை கிடைக்க போகுது எல்லாம் சிபாரிசு உள்ளவர்களுக்குத் தான் கிடைக்கும் என்று... பொதுவாக கூறுகிறார் என்று வைத்துக் கொள்வோம் அவர் கூறிய நமக்கெல்லாம் என்ற வார்த்தையில்! நீங்களும் அடக்கம்! ஆக... உங்களுக்கும் வேலைகிடைக்க போவதில்லை என்று சகுணம் காட்டுகிறது! இதை வீட்டை விட்டு வரும் பொழுதே! அநேக சகுனங்கள் மூலம் நீங்கள் உணரமுடியும்.

ஒரு சமயம் ஓர் அன்பர் தன் மனைவிக்கு சிசேரியன் செய்தால் தான் குழந்தையை வெளியே எடுக்க முடியும்! ஆகையால் சுகபிரசவம் ஏற்படாது என்று டாக்டர்கள் கருதுகிறார்கள்...! எப்படியும் குழந்தைக்கு கேரண்டி இல்லை என்று சொல்கிறார்கள்...! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்கும் பொழுது மற்றொவர் என்னைத் தேடி வந்தார் என்ன விஷயம் என்று கேட்டேன்...!


தன் குழந்தைக்கு ஜாதகம் கணித்து!! பெயர் சூட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் !!! இந்த சகுனத்தை ஆதாரமாக கொண்டு முதலாமவருக்கு! கவலைப்படாதீர்கள்!! உங்களுக்கு குழந்தை சுக்ப்பிரசவம் அடைந்து! நீங்களும் இவரை போல்! குழந்தைக்கு ஜாதகம் கணிக்க வருவீர்கள் என்றேன்! முடிவு மேற்கூறியவருக்கு...

குழந்தை சுகப்பிரசவம் – ஆகியது! குழந்தைக்கு ஜாதகம் கணிக்க வந்தவர் முதல் சகுனம் என்றால் இங்கு நான் கூறியது இரண்டாவது சகுனம்!!! இதே போல்... ஓர் வீட்டில்... ஓர் பிரச்சனைக்காக அழைக்கப்பட்டதில் பலரிடம் கலந்துரையாடல் ஏற்பட்ட சமயம்! ஓர் மாணவன் நான் பத்தாம் வகுப்பு பாஸ் செய்வேனா என்று கேட்டான்...! நான் பதில் சொல்வதற்கு முன்...! அருகே உள்ள இன்னோரு நண்பன் இவன் பாஸ் செய்தால்! நான் என் மீசையை எடுத்துவிடுவேன் என்று அவனிடம் சவால் விட்டான்!! நானோ நீ பாஸ் செய்வாய் என்று கூறினேன் (இந்த வார்த்தை! ஓர் சகுனமாகும்)

பத்தாம் வகுப்பு ரிசல்ட் வந்தது! குறிப்பிட்ட மாணவன் பாஸ் செய்தான். சவால் விட்ட நண்பனின் தகப்பனார் மாரடைப்பால் காலமானார்... இந்து மதவழக்கபடி தந்தையை இழந்தவன் மீசையை

எடுத்தான்!!! இந்த சகுனம்... என்னால் மறக்க முடியாத ஒன்றாகிவிட்டது.

ஒரு முனிவர் தன் மாணவர்களுக்கு ஜோதிடக் கலையை பயிற்சி அளித்து கொண்டு இருந்தபொழுது!! ஓர் கிராமவாசிவந்து – ஐயா என் மனைவி என்னை விட்டு பிரிந்து விட்டாள் மீண்டும் நாங்கள் சேர்ந்து வாழ்வோமா?! என்று கேட்டான். முனிவர் தன் மாணவர்களிடம் இப்பிரச்சனைக்கு பலன் கூறும்படி கூறினார். அப்பொழுது! முனிவரின் மகள் வந்து தந்தையே!! நான் கிணற்றில் இருந்து தண்ணீர் எடுக்கும் பொழுது! கயிறு அறுந்து!! குடம் கிணற்றில் வீழ்ந்து விட்டது என்றாள்...!!!



இந்த சகுனத்தை ஆதாரமாக கொண்டு – மாணவர்கள் கயிறு அறுந்துபோனதால்... இக்கிராம வாசியின் மனைவி பிரிந்து விட்டாள் இனி ஒன்று சேரமுடியாது என்றார்கள். அப்பொழுது ஓர் புத்திசாலி மாணவன் எழுந்து குருவே... கிணற்றில் இருந்த நீரை குடம் பிரித்து கொண்டு வந்தது! ஆனால் விதியின் வலிமையினால் குடம் கிணற்றில் வீழ்ந்து பிரித்து எடுக்கப்பட்ட தண்ணிரு மீண்டும். கிணற்று நீருடன் ஒன்று கலந்தது ஆகையால்... கிணற்றில் இருந்த நீர்... கிணற்றில் இருந்து எத்தனை அடிதூரம் பிரிக்கப்பட்டதோ... அத்தனை மாதங்கள் கழித்து ,,, மீண்டும் இவர் தன் மனைவியிடம் ஒன்று சேர்வார் என்று கூறினான். குருவும் இந்த பலனை கூறிய மாணவனைப் பாராட்டினார்!! ஆம்! சகுனத்தை புத்திசாலி தனமாக கூர்ந்து கவனிக்க வேண்டும் இல்லாவிடில் தவறாக முடிவு எடுக்கும்படி செய்யும்.

இதன் காரணமாக தான்! பெரியவர்கள்... நல்லதையே பேச வேண்டும். நல்லதையே சிந்திக்க வேண்டும் அமங்கலமான சொற்களை உபயோகப்படுத்த கூடாது என்று கூறுகிறார்கள். எந்த நேரத்திலும் நாம் கூறும் வார்த்தைகள் சகுனமாகி விடக்கூடும் என்று கருத்தில்

கொண்டு பேசுவதை அளந்து பேசவும். என்னால் முடியாது! நடக்காது! நாசமாக போச்சு! சனியனே! ஒழியக்கூடாது? தரித்திரம்! கர்மம் எக்கேடும் கெட்டு போ! அழிய நேரம் வந்து விட்டது? போன்ற வார்த்தைகளை உச்சரிக்காமல் இருக்கப்பழக வேண்டும்!

மேற்கூறிய வார்த்தைகளை கொஞ்சம் பொறுமையாக நிதானமாக மனதிற்குள் உச்சரித்துப்பாருங்கள் மனம் (உள்மனம்) சாக்கடை ஆவதை உணர முடியும்? ஏற்கணவே! பல கட்டுரைகளில் திரும்பத்திரும்பச் சொல்லி இருக்கிறேன். உள்மனதில் பதியும் வார்த்தைகள், கருத்துகள், கற்பனைகள், சம்பவங்கள் நடைமுறை வாழக்கையில் விஸ்வரூபம் எடுக்கும் என்று... மேற்கூறிய தீய வார்த்தைகள் எந்த நேரத்தில் நம் உள்மனதில் பதியும் என்பதை சொல்ல முடியாது ஆகையால், அமங்கலமாக பேச வேண்டாம்!!

அக்கால முனிவர்கள் சாபம் இடுவதை! கேள்விபட்டு இருப்பீர்கள், அதாவது முனிவரின் சாபம் அவருடைய உள்மனதில் இருந்து புறப்பட்டு எதிராளியின் உள்மனதில் பதிந்து !! எதிராளியை அழித்து விடும்! சிலர் வயிறு எரிந்து சாபம் கொடுத்தால் பலித்து விடும்! காரணம்?!! தன்னால் எதுவும் செய்யமுடியாத நிலையில் பகுத்தறிவு செயலற்று போய்விடும் பட்சத்தில்! தான் ஒருவன் வயிறு எரிந்து சாபம் கொடுக்கிறான் அந்த சாபம்... அவனையும் அறியாமல் உள்மனதில் இருந்து புறப்படுவாதாகும்.

உள்மனதில் இருந்து புறப்படும் சாபவார்த்தைகள் எதிராளியின் உள்மனதில் அவனையும் அறியாமல் போய்சேர்ந்து விடும்!! எதிராளி எதிரில் நிற்க வேண்டும் என்று அவசியம் இல்லை! பல மைல்களுக்கு அப்பால் இருந்தாலும்... உள்மன ஆற்றலினால்! அந்த வார்த்தைகள் போய்சேர வேண்டிய இடத்தில் சேர்ந்து விடும்...!

மாந்திரீகர்கள்... பல மைல்களுக்கு அப்பால் இருக்கும் ஓர் மனிதனை முன்னேற்றவோ அழிக்கவோ முடிவதன் காரணம்! மனித உள்மனம் பிரபஞ்ச சக்தியுடன் ஐக்கியமாகி இருப்பதால் தான்... ஆதாவது உள்மனம் ரேடியோ அலைவரிசை போல் எங்கும் பரவும் தன்மை உடையது. சரி சகுனம் சம்பந்தப்பட்ட விஷயத்திற்கு வருவோம்! ஓர் சகுனம் ஓர் மனிதனின் உள்மனதை பாதிக்கும் படியாக இருந்தால் தான்!! அந்த சகுனம் பலிக்கும்.

உள்மனதில் பாதிப்பு ஏற்படுத்தாத சகுனங்கள் பலன் தராது!! என்பது விதி!! அடுத்து... வாழ்க்கையில்... ஏகப்பட்ட சம்பவங்கள் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு உள்ளதாக காணப்படுகிறது!! நமக்கு வரவு என்றால் எதிராளிக்கு செலவு!

நமக்கு நோய் என்றால் டாக்டர்களுக்கு தொழில் விருத்தி என்பது போல் விவரிக்க முடியாத தொடர்புகள் எல்லாவற்றிக்கும் உண்டு. தந்தைக்கு தொழில் மந்தமாகும் பொழுது மகன் முன்னேற ஆரம்பிக்கிறான். ஒருவன் முன்னேற ஆரம்பிக்கும் பொழுது தாய்மாமன் நிலை மந்தமாகிறது வருமானம் கூடும்பொழுது வீட்டில் வைத்திய செலவு அதிகரிக்கிறது. மனைவிக்கு நோய் வரும் பொழுது கணவனுக்கு தொழில் விருத்தி ஏற்படுகிறது (ஆஸ்பத்திரி செலவு செய்ய தொழில்

விருத்தி அடைந்தே ஆகவேண்டும்) மனைவி ஊருக்குப் போனால் கணவனுக்குத் தொழில் மந்தமாகிறது! மகனின் வெளியூர் பயணம் தந்தைக்கு ஆபத்தை தருகிறது.

இப்படி ஏகப்பட்ட சம்பவங்களுக்கு எதிர் விளைவுகள் உண்டு!! இவை எல்லாம் சகுன சாஸ்திரத்தில் சம்பந்தப்பட்ட விஷயங்கள்!! (இதைப் பற்றி மிக விரிவாக புத்தகம் எழுத உள்ளோம் அந்த புத்தகத்தில் எல்லாவற்றையும் தெரிவிக்கிறேன்). ஆக! கோவிலுக்கு போவது யோகிகளின் ஆசீர்வாதம் பெறுவது ஜோதிடர்களை சந்திப்பது மற்றும் நமக்கு விருப்பமானவர்களைச் சந்திப்பது எல்லாம் ஓர் சுப சகுனமே!! புதியதாக ஓர் தொழில் ஆரம்பிக்க பூஜை போடுகிறீர்கள் என்றால் சுப சகுனம் ஏற்படத்தான்!! வீட்டில் தண்ணீர் தெளித்து கோலம் போடுவதும் ஓர் சகுனம் தான்! குடும்பத்தலைவியின் மனநிலை கோலத்தில் தெரியும் ஓர் குடும்பத்தின் முன்னேற்றம் பற்றி கோலத்தை பார்த்தே புரிந்து கொள்ள முடியும். (இப்போழுது எல்லாம் சாப்பாட்டுக்கு கஷ்டப்படும் வேலைக்காரிகள் தான் கோலம் போடுகிறார்கள் பாவம்! அவர்களுடைய குடும்ப கஷ்டம், வறுமை, கோலத்தில் பிரதிபலிப்பதை காணலாம் வீடு விருத்திக்கு வருமா?)

மாந்திரீக சாஸ்த்திரத்தில் ஏகப்பட்ட சுப சகுனங்கள் துரதிர்ஷ்ட சகுனங்கள் உண்டு! சொல்லப்போனால்... மாந்திரீகம் என்பதே சகுண சாஸ்திரத்தின் உச்ச கட்ட பயிற்சி என்று தான் சொல்ல வேண்டும். ஆம் மாந்திரீகம் செய்பவர்கள் சுப சகுனத்தை முறைபடி ஏற்படுத்துகிறார்கள்!


ஆம்! என்னைப் போன்றவர்கள் காலப்போக்கில் நடமாடும் சகுனமாக மாறிவிடுவது உண்மை! ஆகையால் தான் நல்லதையே நினைத்து நல்லதையே பேச வேண்டும் என்று எங்களுக்கு ரகஸ்யசாஸ்த்திரம் போதிக்கிறது. ஜோதிடர்கள் ஏன் நல்லதையே சொல்கிறார்கள் என்பதன் காரணம் புரிந்து இருக்குமே. இதில் முக்கிய விஷயம் ஜோதிடர்கள் தன்னம்பிக்கையும் உள்மன ஆற்றல் கொண்டவராகவும் விளங்க வேண்டும்.

இந்துக்களின் திருமண நிகழ்ச்சியில் மங்கள மேளம் முழங்குவதும், அக்னியை (ஒளியை) சாட்சியாக வைத்து வேதம் ஓதுவதும் சுப நேரம் குறிப்பதும் பிறந்த குழந்தைக்கு ஜாதகம் கணிப்பதும்! பெரியவர்கள் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்குவதும் வீட்டில் பக்தி பாடல்கள் போடுவதும் இவை எல்லாம் சாதாரணமாகத் தெரியலாம்! அல்லது வெறும் சம்பிரதாயமாக கூடத் தெரியலாம்!

இவை எல்லாம் சுப சகுனத்தை ஏற்படுத்தும் முயற்சியாகும்! பிரச்சனை தீர வேண்டும்! என்று என்னை தேடி வருபவர்களின் காதுகளுக்கு நான் சுப வார்த்தைகளை பிரயோகம் செய்கிறேன்!!! ஆம்! நான் சுப சகுனத்தின் ஓர் அங்கமாக மாறிவிட்டேன் அவ்வளவு ஏன்? இந்த புத்தகம் உங்கள் வைக்குக் கிடைத்ததே! ஓர் நல்ல சகுனம் தான்! வாழ்க்கையில் சகல சௌபாக்கியமும் பெற வாழ்த்துக்கள்! ஆவிகளின் ஆசீர்வாதங்கள்!

R.P.ஹரி

# ஆற்றல் மிகுந்த கற்பனை



இவ்வுலகம் – இந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்ததற்கு காரணம்? மனிதர்கள் கற்பனை சக்தியை!! மிக பெரிய சாதனைகளுக்கு பின்னால் கற்பனை சக்தி செயல்பட்டு இருப்பதை காணலாம்.

ஆரம்ப காலத்தில் பறவைகள் போல மனிதன் பறக்க ஆசைப் பட்டான். பிறகு வானத்தில் பறப்பது போல கற்பனை செய்தான். நிலவுக்கு செய்வது போலவும் கற்பனை செய்தான்!! விளைவு? மனிதன் வானத்தில் பறக்கிறான் – நிலவில் குடியேற முடியுமா? என்று கற்பனை செய்யும் அளவுக்கு.. நிலவின் முலைமுடுக்குகளில் ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்துவிட்டான். ஆக எல்லா துறைகளிலும் கற்பனை புகுந்து விளையாடுகிறது! கற்பனை செய்யாதவன் நாகரிகமற்றவனாகிவிடுவான். அணியும் ஆடைகளில், நகைகளில் தான் எத்தனை டிசைன் கற்பனை மிளுருகிறது. விஞ்ஞானத்தின் கற்பனை கலர் டி.வி., ஸ்டார் டி.வி, கம்பியூட்டர் என்று தூள் கிளப்புகிறது. வைத்திய சாஸ்த்திரத்தின் கற்பனை!! டெஸ்ட் டியூப் குழந்தையையும் கடந்து விட்டது! மூளையில் மினி கம்பியூட்டரை இணைத்து மனிதனை சூப்பர் பவர் உள்ளவனாக மாற்றும் முயற்சியும் மேற்கொள்ளப் படலாம். கற்பனைதானே!! என்று நினைக்ககூடாது எதிர்காலத்தில் இது நிச்சயம் நடக்கும்!!

கற்பனை என்றால் என்ன? இயலாத காரியத்தை நடக்க முடியாத சந்தர்பச்சூழலிலும் அதிர்ஷ்டத்தையும் கொஞ்சம் கலந்து சுகமாக கற்பனை செய்வதே ஆரோக்கியமான கற்பனை. இந்த கற்பனை மெருகு ஏற... ஏற... வாழ்க்கையில் நிஜமாகவே கற்பனை உண்மையாகி விடும்.

ஹிட்டலர் சாப்பாட்டிற்கே திண்டாடியவன் – சர்வாதிகாரி ஆகிறான்! படிப்பற்றவன் விஞ்ஞானியாகிறான்! மேதை ஆகிறான் ஊனமுற்றவன் ஒலிம்பிக் சாதனை புரிகிறான். இவை எல்லாம் சரித்திரம்